EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 52

## நற்றிணை காட்டும் நம்பிக்கைகள்

**முனைவர் செ. லதா ஈஸ்வரி**
GTN **கலைக் கல்லூரி, திண்டுக்கல்.**
Email: lathaeswari.s@gmail.com

### *முன்னுரை*

பண்டையத் தமிழர் இயற்கையின் அடிப்படையிலேயே நம்பிக்கைகளை வளத்தனர். இயற்கையின் மூலம் ஏற்படும் அச்சங்களைக் கொண்டு நம்பிக்கைகளை ஏற்படுத்தினர். அதாவது இடி, மழை, மின்னல், புயலின் வாயிலாக ஏற்படும் சத்தங்கள் மனிதனை அச்சமூட்டியது. மக்கள் செய்த குற்றத்திற்குக் காரணமே இயற்கையின் சீற்றம் தானென நம்பினர். இதனால் இயற்கையை வணங்கத் தொடங்கினான். மனிதர்களின் அச்ச உணர்வால் தான் நம்பிக்கைகள் தோன்றின என்று கூறலாம். மனிதர்களிடம் ஏற்படுகின்ற நம்பிக்கை அடுத்தடுத்து வருகின்ற ஒவ்வொரு தலைமுறையினருக்கும் பரவி வருகின்றது எனலாம். சங்க இலக்கியமான நற்றிணையில் மக்களிடம் காகம், ஆவி, பாம்பு மற்றும் அணங்கு பற்றிய நம்பிக்கைகள் இருந்ததிற்கான சான்றுகளோடு விளக்கப்பட்டது.

### காகம் பற்றிய நம்பிக்கை

தலைவியின் துயரத்தைக் கண்ட தாய், அகன்ற மனையில் விருந்தினருக்கு உணவு சமைத்து வைப்பாள். அவ்வுணவில் கவளம் எடுத்து முற்றத்தில் பலியாக இட்டனர். அப்போது காகம் வந்து அவ்வுணவைத் தின்னும். தலைவன் தலைவிக்காக சோலையில் காத்திருந்து பின் தலைவன் தலைவியின் துயரத்தை அறிந்து தன் ஊருக்குச் செல்வான். இதனை,

"திருவுடை வியனகர் வருவிருந்து அயர்மார்
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்குகிர் நிமிரல் மாந்தி ஏற்பட
அகலங் காடி அசைநிழற் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை" (நற் – 258, 4-9)

என்ற பாடல் அடிகள் மூலம் காக்கைக்கு பலிசோறு இடுகின்ற நம்பிக்கையை அறிய முடிகின்றது. காக்கை உண்பதற்காகக் காத்திருக்கும் என்பதை,

"மாசில் மரத்த பலியுண் காக்கை
வளிபொரு நெடுஞ்சினை களியொடு தூங்கி" (நற் -281, 12)
என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

திருவிழாவின் போது உணவு சமைத்து பலியை உண்ணுவதற்காக குயவன் தெய்வங்களையும், காக்கைகளையும் அழைப்பான் என்றும் கடவுளுக்கு வைத்த பலிசோற்றை காக்கை வந்து தின்னும் என்றும் கூறப்படுகின்றது. இதனை,

"பலிகள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்றலை மன்றத்து"(நற் - 293, 2-3)
என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

தலைவி கருணைக்கிழங்கின் பொரிக்கறியோடு கூடிய செந்நெல் அரிசியால் சமைத்த சோற்றுபலியைத் தெய்வத்துக்கு இடுவார்கள். அப்போது காகம் தன் கிளையொடு வந்து உண்ணும். என்பதனை,

"கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇ ..."(நற் - 367, 1-2)

என்ற அடிகள் மூலம் காகம் பற்றிய நம்பிக்கையை அறிய முடிகின்றது. இன்றும் காகம் பற்றிய நம்பிக்கை மக்களிடத்தில் இருந்து வருகின்றது. சோறு சமைத்து முதல் சோற்றை காகத்திற்கு இடுவர். இத்தகைய நம்பிக்கை முன்னோர்களை வணங்குவதாகும். உணவை உண்டபின் பலிசோறு படைக்கக் கூடாது எனும் நம்பிக்கை கிராமப்புறத்தில் இன்றும் அதிக அளவில் இருக்கின்றது.

## பாம்பு பற்றிய நம்பிக்கை

மனிதர்கள் பாம்பைப் பார்த்து நடுங்குவதும், பாம்பு மனிதர்களைப் பார்த்து ஓடுவதும் இயற்கை தான். 'பாம்பைக் கண்டால் படையே நடுங்கும்'

என்பது பழமொழி. ஆனால, பாம்புகள் இடிக்கு அஞ்சும் தன்மையைக் கொண்டது. பாம்புகள் இடியோசையின் அதிர்ச்சியில் இறக்கக் கூட நேரிடும் என்பர். இதனை,

“கேழ்கிளர் உத்தி அரவுத்தலை பனிப்பப்
படுமழை உருமின் உரற்றுகுரல்”(நற் - 129, 7-8) .
“....................................... பரந்த
பாம்புபை மழுங்கல் அன்றியும் மாண்ட” (நற் - 238, 8-9).
“.......................................பாம்புடன்று
ஓங்குவரை மிளிர வாட்டி வீங்குசெலல்”(நற் - 51, 2-3)

என்ற பாடல் அடிகள் மூலம் பாம்பு இடியோசை கேட்டாலே அடங்கி சுருங்கிவிடும் என்பதை அறிய முடிகின்றது. மேலும், இரவு நடுயாமத்தில் இடி முழங்கி மோதும்போது பாம்பு அச்சம் கொண்டு தன் நாகமணியைக் கக்கி வருந்தி உழலும். இதனை,

“ உயர்வரை அடுக்கத்து ஒளிறுபு மின்னிப்
பெயல்கால் மயங்கிய பொழுதுகழி பானாள்
திருமணி அரவுத் தேர்ந்து உழல”(நற் - 255, 8-10)

என்ற அடிகள் மூலம் பாம்பு மணியை உமிழும் செய்தியை அறிய முடிகின்றது. சந்திரனைப் பாம்பு உண்ணுவதாக நம்பிய நிகழ்ச்சியும் இன்றளவிலும் இருக்கின்றது. இதனை,

“அகலிரு விசும்பின் அரவுக்குறை படுத்த
பசுங்கதிர் மதியத்து அகனிலாப் போல”(நற் - 377, 6-7)

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது. இன்று இது சந்திரகிரகணம் என்று அறிவியல் அறிஞர்களால் கூறப்படுகின்றது.

## பேய், ஆவி பற்றிய நம்பிக்கை

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். இயற்கையின் மீது கொண்ட அச்சத்தால் மக்கள் குழு வாழ்க்கையை மேற்கொண்டனர். அவ்வச்சத்தின் விளைவாக ஒவ்வொரு பொருளுக்கும் மக்களின் எண்ணத்திற்கும் ஏற்றவாறு ஆவி அல்லது ஆன்மா என்று பெயர் வைத்தனர். நம்பிக்கையின் அடிப்படையில் அவற்றை வணங்கத் தலைப்பட்டனர். மரம், கடல், கல் ஆகியவற்றில் ஆவி உறைந்திருப்பதாக நம்பினர்.

இவ்வாறு ஆவி கல்லில் குடி புகுந்திருக்கும் என்ற நம்பிக்கை, தமிழக மக்கள் மற்றும் பழங்குடிகளிடம் இருந்திருக்க வேண்டும். இதன் விளைவே

நடுகல் தோற்றக் காரணமாக இருந்திருக்கக் கூடும் என்ற உண்மையை உணர முடிகின்றது.

## பேய் பற்றிய நம்பிக்கை

இன்று கிராமப்புற மக்களிடம் மட்டுமின்றி நகர்வாழ் மக்களிடமும் பேய் பற்றிய நம்பிக்கை இருக்கின்றது. பேய்க்குச் சடங்கு செய்தல், அதைக் கட்டுப்படுத்துதல் போன்றவை பழக்கம் மக்களிடம் இருக்கின்றன. குறிப்பாகச் சங்க இலக்கியப் பாடல்களில் பேய் மகளிர் என்ற நிலையில் அதன் செயல்பாடுகளை விரித்துரைக்கின்றனர். "இவை மனித மனத்தின் அச்சவுணர்வு காரணமாகப் படைத்துக் கொண்ட உருவுடைய ஒன்றாகக் கருதப்பட்டிருப்பதனையே இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன. இவை பாடப்படுவோரின் வீரம், வெற்றி, கொடை, புகழ் போன்றவற்றின் விளக்கத்திற்குப் பயன்பட்டுள்ளதாகச் சங்ககால சான்றோர் குறிப்பிடுவர்". பேய் என்ற மீவியல் சக்தி மனிதரோடு தொடர்புபடுத்தியே பேசப்பட்டுள்ளது. குறிப்பாக வெறியாட்டு நிகழ்ச்சி பேயோடு தொடர்புடையதாகும்.

துன்பம் தரக்கூடியதும் அச்சத்தை விளைவிக்கக் கூடியதுமாகக் கருதிய ஓர் ஆற்றலைப் பேய் என்ற சொல்லால் அழைத்ததற்கான சான்றுகள் பல பாடல்களில் உள்ளன. பேய் என்பது இறந்தவர்களின் ஆவி என்பதைச் சங்கப் பாடல்கள் சுட்டவில்லை. எனினும், பேயின் விரல்கள் செம்முருக்கின் பூங்கொத்தில் காய்த்துப் பழுத்து முற்றிய மரத்தின் நெற்றும் போன்று இருந்தன என்பதை,

"வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்"(நற் - 73, 1-2)

என்ற பாடல் அடிகள் மூலம் பேயின் உறுப்புக்கள் பெரியதாகவும் விகாரமாகவும் இருந்துள்ளன என்பதையே சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. பேய் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நாட்டுப்புற மக்கள் வரையறை செய்து கொண்டனர் போலும்.

பேய்கள் அனைத்தும் நடுயாமத்தில் உலவும் என்று சங்கப் பாடல்கள் கூறுகின்றன. இதனை,

"கழுதுகால் கொள்ளும் பொழுது கொள் பானாள்" ( நற் - 171, 9)
"கழுதுகால் கிளர ஊர்மடிந் தன்றே" (நற் - 255, 1)
என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகின்றது.

## அணங்கு பற்றிய நம்பிக்கை

அணங்கு என்பதற்குப் பேரகராதி "வருத்தம், நோய், அச்சம், கொலை, தெய்வம், தெய்வமகள் வருத்திக் கொள்ளும் தெய்வமகள், தெய்வத்திற் கொப்ப மாதர், பேய், வெறியாட்டு, சண்டாளன், அழகு, வடிவு, குட்டி ஆகிய பதினைந்து பொருள்களைத் தமிழ்பேரகராதி தருகின்றது".

மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் இயற்கையையே தெய்வமாக வழிபடத் தொடங்கினர். இயற்கையை வழிபட்ட மக்கள் பின்னாளில் உருவ வழிபாட்டினை மேற்கொண்டனர். தங்களின் முன்னோரையும் தங்களைக் காத்தவர்களையும் உருவம் அமைத்து வழிபட்டனர்.

இந்தியா முழுவதிலும் குறிப்பாக தென்னிந்தியாவிலும் தமிழகத்திலும் மரத்தைக் கடவுளுடன் தொடர்புபடுத்தி வழிபடும் பழக்கம் இருந்துள்ளது. இதனால் திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் திருமணம் தடைப்படட் பெண்கள் தலமரங்களுக்கு மஞ்சள் கயிறு கட்டி வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபட்டால் விரைவாகத் திருமணம் முடியும் என்று நம்புகின்றனர். மேலும், ஆலமரத்திலும் கடவுள் இருக்கின்றது என்று வழிபாடு செய்கின்றனர். இச்செய்தியை,

> "எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
> கடவுள் முதுமரத்து, உடனுறை பழகிய"(நற் - 83, 12).
> "நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து"(நற் - 343, 4 ).

என்ற பாடல் அடிகளில் தலைவன் ஊரில் இருக்கும் பெருங்கடவுள் தங்கியுறையும் ஆழமரத்தை மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

சங்க இலக்கியமான நற்றிணையில் மக்களிடம் காகம், ஆவி, பாம்பு மற்றும் அணங்கு பற்றிய நம்பிக்கைகள் இருந்ததிற்கான சான்றுகளோடு விளக்கப்பட்டது. அத்தகைய நம்பிக்கைகளை மக்கள் மரபுவழியாக இன்றளவிலும் பின்பற்றி வருகின்றனர்.

## துணை நின்ற நூல்கள்


1. நாராயணசாமி.,அ 2007 சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18.
2. தேவநேயப்பாவாணர்.,ஞா 2000 பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், தமிழ் மண் பதிப்பகம், சென்னை.
3. பக்தவத்சலபாரதி 2009 பண்பாட்டு மானிடவியல், பதிப்பகம், சிதம்பரம்.